
# திருக்குறள் செம்மல் திரு.ந.மணிமொழியனார் ஐந்தாம் ஆண்டு புகழஞ்சலி நிகழ்வுகள்

**நாள்: 13/11/2021**



தமிழ்நாடு ஆயிர வைசிய சங்க மாநில முன்னாள் தலைவர் திருக்குறள் செம்மல் தெய்வத்திரு. ந.மணிமொழியனார் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி தினமான இன்று (13.11.21), பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள ஆயிர வைசிய சங்கங்கள் புகழஞ்சலிக் கூட்டம், திருவுருவப்பட மலரஞ்சலி மற்றும் அன்னதானம் செய்தல், மாணவர்களுக்கு கல்வி உதவி செய்தல் என பலதரப்பட்ட சமூகப் பங்களிப்பைச் செய்து வருகிறார்கள்.

திருக்குறள் செம்மல் அவர்களின் பெருமை நிறைந்த நினைவுகளைப் போற்றும் வகையில், சமூக நலப் பணிகள் வாயிலாகவே, இவ்வாறு அவரை நினைவுகூர்ந்தது மிகவும் சிறப்பும் பொருத்தமும் வாய்ந்ததாகும்.

இலக்கியப் பணிகள், ஆன்மிகப் பணிகள் மற்றும் சமுதாய மேம்பாட்டுப் பணிகளுக்காகவே தனது வாழ்நாள் முழுமையும் மக்கள் தொண்டாற்றிய திருக்குறள் செம்மலுக்கு இதைவிடச் சிறப்பான நினைவஞ்சலி இருக்க முடியாது.

## இந்த ஆண்டின் நினைவஞ்சலியை சமுதாய நல்லிணக்க நாளாக ஆக்கியவர்கள்:

### வந்தவாசி

திருக்குறள்செம்மல் ந.மணிமொழியனார் அவர்களின் நினைவு தினமான இன்று (13-11-2021). வந்தவாசி ஆயிரவைசியர் சங்கம் சார்பில் மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வும், அன்னதானம் வழங்கியும், ஏழை மாணவ, மாணவிகளுக்கு நோட்டுபுத்தகம், பேனா, பென்சில் மற்றும் ஓர் ஆயிரவைசிய மாணவிக்கு கல்வி கட்டணமாக ரூபாய் 5000/- ஆகிய உதவிகள் வழங்கப்பட்டன. ரொட்டி, பால், பிஸ்கட் விநியோகிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஆயிரவைசியர்கள் பெருமளவில் பங்கேற்றனர். இந்நிகழ்விற்கு பெரிதும் உதவிட்ட சிவக்குமார் செட்டியார் அவர்களுக்கும், புகைப்படம் எடுத்த திருமதி அபிதாமாதவன் அவர்களுக்கும் நன்றிகள். சங்கத்தினரின் அழைப்பை ஏற்று பங்கேற்ற அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.












வந்தவாசி


வந்தவாசி


வந்தவாசி
ஆயிரவைசியர் சங்கம்




வந்தவாசி




பவித்ரா


பவித்ரா

<u>திருப்பத்தூர்</u>

திருப்பத்தூர் மாவட்ட ஆயிர வைசிய சங்கத்தின் சார்பில் தமிழ்நாடு மாநில ஆயிரவைசியர் சங்கத்தின் முன்னாள் தலைவர், திருக்குறள் செம்மல் ஸ்ரீமான் நா.மணிமொழியனார் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி மிகச் சிறப்பாக திருப்பத்தூர் உதவும் உள்ளங்கள் அமைப்பில் இன்று 13.11.2021 சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டு 200 ஆதரவற்றோருக்கு அன்னதானம் (அறுசுவை உணவு) வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு வந்திருந்து நினைவஞ்சலி செலுத்தி, உணவு பரிமாறி நிகழ்ச்சியை சிறப்பித்த அனைத்து நிர்வாகிகளுக்கும் மாவட்ட சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
















vivo X50 Pro


vivo X50 Pro


vivo X50 Pro


vivo X50 Pro


REHABILITATION OF MENTALLY ILL PERSONS
vivo X50 Pro


vivo X50 Pro

## <u>பொள்ளாச்சி</u>

இன்று காலை 10.30am அளவில் புதிதாக கட்டப்பட்ட நமது ஆயிரவைசிய திருமண மண்டபத்தில் சமுதாய மக்கள் சூழ தெய்வத்திரு நா.மணிமொழியன் ஆர் ஐயா அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது...

மேலும் அரசு மருத்துவமனையில் ஏழை-எளிய கர்ப்பிணி பெண்களுக்கு வினியோகிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திரளான பொள்ளாச்சி வாழ் ஆயிரவைசிய பெருமக்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்...























பரமக்குடி

பரமக்குடியில் இன்று (13.11.2021) ஒப்பற்ற மாநில ஆயிர வைசியர் சங்க முன்னாள் தலைவரும் திருக்குறள் செம்மல் திருமிகு N.மணிமொழியனார் அவர்களின் 5ம் ஆண்டு நினைவஞ்சலி கூட்டம்,ஊர்வலம், ஏழைகளுக்கு உதவி,நினைவுப் பரிசு வழங்கும் விழா மிக சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் திரு M. கார்த்திக் மணிமொழியன்,தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்க பொருளாளர் திரு ஜெயக்குமார்,மாநில வழக்கறிஞர் பிரிவு தலைவர் திரு P. N. செந்தில் குமார், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு செ.முருகேசன், மாநில துணை செயலாளர் திரு அருண் மோகன், பரமக்குடி ஆ,வை, சபை தலைவர் திரு ராசி N.போஸ், பரமக்குடி நகர் தி.மு.க. செயலாளர்கள், ஆ.இ.அ.தி.மு.க. நகர் முன்னாள் செயலாளர், பாரதிய ஜனதா கட்சி மாநில செயலாளர், நகர் காங்கிரஸ் கட்சி தலைவர்,ம.தி.மு.க கட்சி செயலாளர், மாற்று சமூக பிரமுகர்கள், பரமக்குடி ஆ.வை.சபை செயலாளர், பொருளாளர், நிர்வாகஸ்கள், இளைஞர் சங்க நிர்வாகஸ்தர்கள், சமூகநல சங்க நிர்வாகஸ்தர்கள், இளையான்குடி சபை பொறுப்பாளர்கள், செட்டியார் சேவை சங்கத்தினர்கள்,வெள்ளாளன் செட்டியார் சங்கத்தினர்கள்,மதுரை திருவாரூர் ஆயிர வைசியர் மஞ்சபுத்தூர் சங்க பொறுப்பாளர்கள் மற்றும் ஏராளமான நகர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.நிகழ்ச்சியை திரு அம்பலம் ரமேஷ் மற்றும் குழுவினர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.









## கடலூர்

தமிழ்நாடு ஆயிரவைசியர் சங்கத்தின் முன்னாள் மாநில தலைவர் திருக்குறள் செம்மல் தெய்வத்திரு. நா.மணிமொழியனார் ஐயா அவர்களின் நினைவுநாள் (13-11-2021) இன்று மாநில செயலாளர் டாக்டர் மா. ஜெயராமன் ஐயா அவர்களின் வழிகாட்டுதலுடன், கடலூர் மாவட்ட ஆயிரவைசியர் சங்கத்தின் சார்பில் பெருமகனாரின் திருவுருவ படத்திற்கு மலரஞ்சலி மாநில துணை செயலாளர் வி. சின்னதுரை செலுத்தினார். எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கினார். கடலூர் -2 திருப்பதிரிப்புலியூர் அருள்மிகு பெரியநாயகி அம்மை உடனுரை பாடலிஸ்வரர் கோவில் அருகில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆயிரவைசிய சங்கத்தினர் பலர் பங்கேற்று நா.மணிமொழியனரின் நினைவை போற்றினார்கள்.








## <u>ஆம்பூர்</u>

ஆம்பூர் ஆயிர வைசிய சங்கத்தின் சார்பில் தமிழ்நாடு ஆயிரவைசியர் சங்கத்தின் முன்னாள் தலைவர், திருக்குறள் செம்மல் ஸ்ரீமான் நா.மணிமொழியனார் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி மிகச் சிறப்பாக ஆம்பூரில் ஸ்ரீஅம்மன்சாரிடபுள்டிரஸ்ட் ல் இன்று ஏற்பாடு செய்யப்பட்டு 100 ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு வந்திருந்து நினைவஞ்சலி செலுத்தி, உணவு பரிமாறி நிகழ்ச்சியை சிறப்பித்த அனைவருக்கும் ஆம்பூர் ஆயிரவைசியர்சங்கம் சார்பில் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.








## தர்மபுரி

தர்மபுரி மாவட்ட ஆயிரவைசிய சங்கத்தின் சார்பில் தெய்வத்திரு மணிமொழியன் அவர்கள் நினைவஞ்சலி நிகழ்வை முன்னிட்டு தமிழ்நாடு ஆயிரவைசிய சங்கத்தின் மாநில செயலாளர் மாவட்டத்தின் கௌரவ ஆலோசகர் உயர்திரு டாக்டர் ஜெயராமன் அவர்கள் கௌரவத் தலைவர் M.கோபாலகிருஷ்ணன் மாவட்டத் தலைவர் A.மணிகண்டன் மாவட்ட செயலாளர் M.அருணாச்சலம் மற்றும் நிர்வாகிகள் R.அரசகுமார் J.கார்த்திகேயன் ஆயிரவைசிய நம் மாவட்ட சங்கத்தின் மூலம் ஆதரவற்ற முதியோர்களுக்கு அன்னதானம் மிக சிறப்பாக வழங்கப்பட்டது.













## திருச்சி

தமிழ்நாடு ஆயிரவைசிய சங்கத்தின் முன்னாள் தலைவர். தெய்வத்திரு. திருக்குறள் செம்மல் மணிமொழியனார் அவர்களின் நினைவுதினம் இன்று மதியம் 12.30 மணியளவில் நினைவஞ்சலியும் அதன் பின்னர் ஸ்ரீ காவேரி தங்க மாளிகையில், 86, பெரிய கடைவீதி, திருச்சி-8. மற்றும் 100 நபர்களுக்கு உணவு பொட்டலங்கள் வழங்கும் நிகழ்ச்சியும் மிக சிறப்பாக நடைபெற்றது. பங்கேற்ற ஒத்துழைப்பு வழங்கிய நிர்வாகிகளை திருச்சி மாவட்ட ஆயிரவைசிய சங்கம் சார்பில் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.








## கோவை

கோவை மாவட்ட ஆயிரவைசியர் சங்கம், மற்றும் கோவை மாவட்ட ஆயிர வைசிய கிளைச் சங்கங்கள் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகளும், நலத்திட்ட உதவிகள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே.

கோவை மாவட்ட ஆயிரவைசிய சங்கத்தின் சார்பில் வேதபாடசாலையில் வேதங்கள் பயிலும் மாணவச் செல்வங்களுக்கு ஒரு நாள் உணவு தேவைக்கான முழு தொகையையும் வழங்கியமைக்கு ஜெகத்குரு ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அன்னபூரணி வேதபாடசாலை நிர்வாகிகள் நன்றி தெரிவித்தார்கள்.

இரண்டாவதாக கோவை மாவட்ட ஆயிரவைசிய சங்கத்தின் சார்பில் ஆயிரவைசிய சமுதாயத்தில் இருந்து தேர்வு செய்யப்பட்ட நிதித் தேவை இருக்கின்ற ஒரு மாணவன், ஒரு மாணவிக்கு தலா 5000 ரூபாய் வீதம் 10000/- நிதியுதவி வழங்கப்பட்டது. தொடர்ந்து கிளைச் சங்கங்கள் சார்பில் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றின் மொத்த தொகுப்பானது இன்று மாலை நடைபெறும் தெய்வத்திரு மணிமொழியன் அவர்கள் புகழஞ்சலி ஜூம் செயலி நிகழ்ச்சியில் வழங்கிட காத்திருக்கிறோம்.

கோவை மாவட்ட ஆயிரவைசியர் சங்கத்தின் சார்பில் தெய்வத்திரு மணிமொழியன் அவர்களுக்கான புகழஞ்சலி.



## விழுப்புரம் – கள்ளக்குறிச்சி

தமிழ்நாடு ஆயிரவைசியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் திருக்குறள்செம்மல் தெய்வத்திரு ந.மணிமொழியனார் அவர்களின் நினைவுநாளையொட்டி ஒருங்கிணைந்த விழுப்புரம்-கள்ளக்குறிச்சி மாவட்ட ஆயிரவைசியர் சங்கம் சார்பில், உளுந்தூர்பேட்டையில் தலைவர் A.கோவிந்தசாமி செட்டியார் தலைமையில் திரளான ஆயிரவைசியர்கள் பெருமகனாரின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர்.

ஐயாவின் நினைவுநாளையொட்டி உளுந்தூர்பேட்டை வள்ளலார் மடத்தில் சுமார் 100 ஏழை மக்களுக்கு காலை சிற்றுண்டியாக பொங்கல், வடை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பங்கேற்ற ஆயிரவைசியர்கள் திருக்குறள் செம்மலை கண்ணீருடன் நினைவு கூர்ந்தனர்.ஆயிரவைசிய சமூகத்தினர் பெரும்பாலான கலந்து கொண்டனர்.









INDIA'S
NO.1
CEMENT
















**மேற்கூறிய அனைத்து மாவட்ட சங்கங்களுக்கும் நன்றி.**

## நியூ காலேஜ் ஹவுஸ்

திருக்குறள் செம்மலின் குடும்பத்தினர், மதுரை நியூ காலேஜ் ஹவுஸ் ஹோட்டலில் திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் அவர்கள் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து 100ஏழைகளுக்கு இலவச சிற்றுண்டி வழங்கினார்கள்.





## <u>கொட்டக்குடி</u>

திருக்குறள் செம்மல் அவர்களின் சொந்த ஊரான கொட்டக்குடியில், அவர்களின் நினைவு நாளன்று கடந்த மூன்று வருடங்களாக விநாயகாமிஷன்ஸ் மற்றும் அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து நடத்தி வந்த, மருத்துவ முகாம் மற்றும் கண் சிகிச்சை முகாம் இரண்டு ஆண்டுகளாக கோவிட் அலையினால் நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் தொடர்ந்து நடைபெறும் என நிர்வாக இயக்குனர் நியூ காலேஜ் ஹவுஸ், மாநில கல்வி குழு உறுப்பினர், ஆயிர வைசியர் கல்வி நல அறக்கட்டளை பொருளாளர், திரு. கார்த்திகேயன் மணிமொழியன் கூறினார்.



## ஆறுபடை வீடு தொழில்நுட்பக் கல்லூரி – AVIT , Paiyanoor

தெய்வத்திரு. திருக்குறள் செம்மல் மணிமொழியனார் அவர்களின் 5 வது நினைவு தினத்தை (13/11/2021) முன்னிட்டு மழை மற்றும் வெள்ளத்தால் பாதித்த 1000 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.






















## ஆறுபடை வீடு மருத்துவக் கல்லூரி & மருத்துவமனை – AVMC, Puducherry

தெய்வத்திரு. திருக்குறள் செம்மல் மணிமொழியனார் அவர்களின் 5 வது நினைவு தினத்தை (13/11/2021) முன்னிட்டு மழை மற்றும் வெள்ளத்தால் பாதித்த 1000 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.
















வாட்ஸ் ஆப் குழுக்களிலும், முகநூலிலும், செய்தித்தாள்களிலும் புகழஞ்சலி செய்தி வெளியிட்ட அனைவருக்கும் நன்றி. மேலும், திருக்குறள்செம்மல் தெய்வத்திரு மணிமொழியனாரின் நினைவுநாளை முன்னிட்டு திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளத்தை சேர்ந்த திரு பாலகிருஷ்ணன் அவர்கள் தமிழ்நாடு ஆயிரவைசியர் சங்கத்தின் அதிகாரபூர்வ மாதஇதழான ஆயிரவைசியனுக்கு ஆயுள்சந்தாதாரராக ஐந்து ஆயிரவைசியர்களை இணைத்துள்ளார். அவரைத் தொடர்ந்து பலரும் இன்று சந்தாதாரர் ஆகி வருகிறார்கள். அனைவருக்கும் நன்றி.

திருக்குறள் செம்மல் அவர்கள் கண்ட கனவான சமூதாய ஒற்றுமையும், அற வழியில் அன்புடன் அனைவருக்கும் உதவி செய்யும் குணமும், ஒவ்வொரு ஆயிர வைசியர் மனதிலும் விதைக்கப்பட்டுள்ளதை இப்படியான நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

அவர் கனவை நனவாக்கப் பாடுபட்ட அனைத்து மாவட்ட மாநில நிர்வாகிகள் ஊடகக் குழு அலைபேசி செயலி மற்றும் ஆயிரவைசிய பெருமக்கள் அனைவருக்கும் நன்றி

எல்லாருக்கும் அன்புடன்,

டாக்டர். ஏ.எஸ். கணேசன்
மாநில தலைவர்

டாக்டர். அனுராதா கணேசன்
மாநில அலைபேசி தலைமை நிர்வாகி

திரு. கார்த்திகேயன் மணிமொழியன்
பொருளாளர், ஆயிர வைசியர் கல்வி நல அறக்கட்டளை,

திருமதி கவிதா ரெங்கநாதன்

திரு.கல்யாணராஜன் மணிமொழியன்

திருமதி கமலா மணிமொழியன்